$= 23 - 2$ (மூன்றாவது + செய்யப்பட்டது)
$= 21$ (இறுதியில் − செய்யப்பட்டது)
$\therefore\ 12 \times 36 \div 12 \div 3 + 5 + 6 - 2 = 21$

உ) $15 - [17 + 30 \div 6 - (6 + 6) + 7]$
$= 15 - [17 + 30 \div 6 - 12 + 7]$ (முதலில் ( ) நீக்கப்பட்டது)
$= 15 - [17 + 5 - 12 + 7]$ (இரண்டாவது ÷ செய்யப்பட்டது)
$= 15 - [22 - 5]$ (மூன்றாவது + செய்யப்பட்டது)
$= 15 - 17$ (நான்காவது [ ] செய்யப்பட்டது)
$= -2$ (இறுதியில் − செய்யப்பட்டது)
$\therefore\ 15 - [17 + 30 - 6 - (6 + 6) + 7] = -2$

2. ஒரு துணி ஏற்றுமதி நிறுவனமானது 235219 சட்டைகள், 158342 கால்சட்டைகள் மற்றும் 11704 ஜாக்கெட்டுகள் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்கிறது. மூவகை துணிகளுக்குமான ஓராண்டு உற்பத்தி எவ்வளவு?

தீர்வு : உற்பத்தி செய்யப்பட்ட சட்டைகள் = 235219
உற்பத்தி செய்யப்பட்ட கால்சட்டைகள் = 158342
உற்பத்தி செய்யப்பட்ட ஜாக்கெட்டுகள் = 11704
மொத்த உற்பத்தி = 4,05,265
மூவகை துணியின் மொத்த உற்பத்தி = 4,05,265

3. இந்திய மக்கள்தொகை 1961 –ஆம் ஆண்டில் 439 மில்லியன்களாக இருந்தது. இது சீராக 2001 ஆம் ஆண்டில் 1028 மில்லியன்களாக அதிகரித்தது. அதிகரித்த மக்கள் தொகையை சரியான காற்புள்ளிகளை பயன்படுத்தி இதில் எண்முறையில் எழுதுக.

தீர்வு : 2001 ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகை = 1028 மில்லியன்
1961 ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகை = 439 மில்லியன்
∴ அதிகரித்த மக்கள்தொகை = 589 மில்லியன்

இந்திய எண் முறை: அதிகரித்த மக்கள்தொகை 58,90,00,000
(ஐம்பத்து எட்டு கோடியே தொண்ணூறு இலட்சம்)

4. ஒருவர் தன்னிடமிருந்த ₹10,00,000 இல் ₹8,70,000 க்கு ஒரு வீட்டை வாங்கினார். மீதமுள்ள பணத்தில் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புள்ள ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை அவர் வாங்க வேண்டும். அவரிடம் மீதமிருக்கும் தொகை எவ்வளவு? அது அந்த தொலைக்காட்சிப் பெட்டி வாங்க போதுமானதா?

தீர்வு : அவரிடமிருந்து மொத்த தொகை = ₹ 10,00,000 (9 10)
வீட்டை வாங்கிய தொகை = ₹ 8,70,000 (–)
மீதி தொகை = ₹ 1,30,000
தொலைக்காட்சிப்பெட்டி வாங்க தேவையான தொகை = ₹ 1,00,000
1,00,000 < 1,30,000
∴ மீதியிருக்கும் தொகை தொலைக்காட்சி பெட்டி வாங்க போதுமானது.

5. ஒரு பெட்டியில் ஒவ்வொன்றும் 120 கிராம் எடையுள்ள 50 பிஸ்கெட் பாக்கெட்டுகள் உள்ளன. 900 கி.கி எடைக்கு மேல் சுமக்கமுடியாத ஒரு வண்டியில் எத்தனை பெட்டிகள் ஏற்ற முடியும்?

தீர்வு : ஒரு பிஸ்கெட் எடை = 120 கிராம்
∴ 50 பிஸ்கெட் பாக்கெட்டுகளின் எடை = 120×50 = 6000 கிராம்
∴ 1000 கிராம் = 1 கி.கி.
∴ 6000 கிராம் = 6 கி.கி.
ஒரு பெட்டியின் எடை = 6 கி.கி.
வண்டியில் ஏற்ற முடிந்த எடை = 900 கி.கி.
∴ பெட்டிகளின் எண்ணிக்கை = $900 \div 6 = 150$ பெட்டிகள்
150 பெட்டிகள் ஏற்ற முடியும்

6. ஒரு உதவி செய்வதற்காக போடப்பட்ட கண்காட்சியில் ஒரு மாணவரிடமிருந்து ₹670 வசூலிக்கப்பட்டால் 5342 மாணவர்களிடமிருந்து பெறப்படும் மொத்த தொகை எவ்வளவு?

தீர்வு : ஒரு மாணவனிடம் பெறப்பட்ட தொகை = ₹ 670
∴ 5342 மாணவர்களிடம் பெறப்பட்ட தொகை = 5342×670 = ₹ 35,79,140
பெறப்பட்ட மொத்த தொகை = ₹ 35,79,140

7. ஓர் இலட்சத்தில் எத்தனை ஆயிரங்கள் உள்ளன?

தீர்வு : $\frac{1,00,000}{1000}$ = 100 ஆயிரங்கள்

எண்களின் மதிப்பீடு :

மதிப்பீடு குறித்த சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு.

- புதுதில்லியிலுள்ள இராஜ்பத்தில் ஏறத்தாழ 60,000 மக்கள் குடியரசு நாள் விழாவின் அணிவகுப்பைக் கணடுகளித்தனர்.
- இந்தியப் பெருங்கடலில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி ஏற்பட்ட நில நடுக்கம் மற்றும் கடற்கோளினால் (சுனாமியினால்) பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 2,80,000 மக்கள் இறந்துள்ளனர்.
- இந்தியா – பாகிஸ்தானுக்கு இடையே நடந்த கிரிக்கெட் போட்டியைத் தொலைக்காட்சியில் உலகம் முழுவதும் தோராயமாக 30 மில்லியன் கிரிக்கெட் விரும்பிகள் பார்த்து மகிழ்ந்தனர்.
- இது போன்ற செய்திகளை நாம் அவ்வப்போது தொலைக்காட்சிகளிலும் நாளிதழ்களிலும் பார்க்கின்றோம். இவை மிகச் சரியான எண்ணிக்கையைக் கொடுக்கின்றனவா? இல்லை . இங்கே கொடுக்கப்பட்ட எண்கள் துல்லியமானவை அல்ல .

www.surabooks.com

www.surabooks.com

- இதன் காரணமாகத்தான் நாம் பொதுவாக 'சுமார்', 'அருகில்' மற்றும் 'தோராயம்' போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறோம்.
- சிறிது கூடுதலாகவோ குறைவாகவோ குறிப்பிடுவதாகும். இத்தகைய மதிப்பு உத்தேச மதிப்பு எனப்படும். ஆகவே
- ஓரளவு கணித்துச் சொல்ல உத்தேச மதிப்பு தேவை .
- பொதுவாக உத்தேச மதிப்புகளைப் பெற, நாம் எண்களை அருகில் உள்ள பத்துகள், நூறுகள் அல்லது ஆயிரங்களுக்கு முழுமையாக்குவோம்.
- முழுமையாக்குதல் என்பது நமக்கு ஏற்றவாறு ஓர் உத்தேச அளவை காணும் வழி ஆகும். அது எண்களை அருகிலுள்ள இலக்கங்களைக் கொண்டு, பொருத்தமான எண்ணைத் தரும்.

இவற்றை முயல்க

(பக்கம் 20)

1. பின்வரும் எண்களை அருகிலுள்ள பத்துகளுக்கு முழுமையாக்குக.

(i) 57 (ii) 189 (iii) 3,956 (iv) 57,312

தீர்வு : (i) 57



செய்யவேண்டியது 57 ஐ பத்துகளுக்கு முழுமையாக்குதல்

பத்தாவது இடமதிப்பில் உள்ள எண் 5

5 -இன் வலது பக்க எண் 7 > 5

∴ 5 உடன் 1 ஐக் கூட்ட 5 + 1 = 6

∴ 6 என்ற எண்ணின் வலதுபக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 60

(ii) 189



189 -ஐ பத்துகளுக்கு முழுமையாக்க வேண்டும்

பத்தாவது இடமதிப்பில் உள்ள எண் 8

8 இன் வலதுபக்க எண் 9 > 5

∴ 8 உடன் 1ஐக்கூட்ட 8 + 1 = 9

∴ 19 என்ற எண்ணின் வலதுபக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 190

(iii) 3,956



3956 -ஐ பத்துகளுக்கு முழுமையாக்க வேண்டும்

பத்தாவது இடமதிப்பில் உள்ள எண் 5

5 இன் வலதுபக்க எண் 6 > 5

∴ 5 உடன் 1ஐக் கூட்ட 5 + 1 = 6

∴ 396 என்ற எண்ணின் வலதுபக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 3960

(iv) 57,312



57312 ஐ பத்துகளுக்கு முழுமையாக்க வேண்டும்

பத்தாவது இடமதிப்பில் உள்ள எண் 1

1 இன் வலதுபக்க எண் 2 < 5 (2 $\ngeq$ 5)

∴ 1 என்ற எண்ணை மாற்றத் தேவையில்லை

∴ 5731 இன் வலதுபக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 57310

www.surabooks.com

2. **பின்வரும் எண்களை அருகிலுள்ள பத்துகள், நூறுகள் மற்றும் ஆயிரங்களுக்கு முழுமையாக்குக.**
(i) 9,34,678 (ii) 73,43,489 (iii) 17,98,45,673



தீர்வு : (i) 9,34,678

(அ) 9,34,678 –ஐ பத்துகளுக்கு முழுமையாக்க
பத்தாவது இடமதிப்பில் உள்ள எண் 7
7 இன் வலதுபக்க எண் $8 > 5$
$\therefore$ 7 உடன் 1 ஐக் கூட்ட $7 + 1 = 8$
9,34,68 என்ற எண்ணின் வலதுபக்க இலக்கங்களை
பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 9,34,680

(ஆ) 9,34,678 -ஐ நூறுகளுக்கு முழுமையாக்க
நூறாவது இடமதிப்பில் உள்ள எண் 6
6 இன் வலதுபக்க எண் $7 > 5$
$\therefore$ 6 உடன் 1 ஐக் கூட்ட $6 + 1 = 7$
9,347 இன் வலது பக்க இலக்கங்களை
பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 9,34,700



(இ) 9,34,678 -ஐ ஆயிரங்களுக்கு முழுமையாக்க
ஆயிரமாவது இடமதிப்பில் உள்ள எண் 4
4 இன் வலதுபக்க எண் $6 > 5$
$\therefore$ 4 உடன் 1 ஐக் கூட்ட $4 + 1 = 5$
9,35 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை
பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 9,35,000



(ii) 73,43,489

(அ) 73,43,489-ஐ பத்துகளுக்கு முழுமையாக்க
பத்தாவது இடமதிப்பில் உள்ள எண் 8
8 இன் வலதுபக்க எண் $9 > 5$
$\therefore$ 8 உடன் 1 ஐக் கூட்ட $8 + 1 = 9$
73,43,49 என்ற எண்ணின் வலது பக்க
இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 73,43,490



(ஆ) 73,43,489-ஐ நூறுகளுக்கு முழுமையாக்க
நூறாவது இடமதிப்பில் உள்ள எண் 4
4 இன் வலதுபக்க எண் $8 > 5$
$\therefore$ 4 உடன் 1 ஐக் கூட்ட $4 + 1 = 5$
73,435 இன் வலது பக்க இலக்கங்களை
பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 73,43,500



(இ) 73,43,489-ஐ ஆயிரங்களுக்கு முழுமையாக்க
ஆயிரமாவது இடமதிப்பில் உள்ள எண் 3
3 இன் வலதுபக்க எண் $4 < 5$ ($4 \ngeq 5$)
$\therefore$ 3 என்ற எண்ணை மாற்றத் தேவையில்லை
3 இன் வலது பக்க இலக்கங்களை
பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 73,43,000



www.surabooks.com

(iii) 17,98,45,673

(அ) 17,98,45,673 -ஐ பத்துகளுக்கு முழுமையாக்க

பத்தாவது இடமதிப்பில் உள்ள எண் 7

7 இன் வலதுபக்க எண் $3 < 5 (3 \not\geq 5)$

∴ 7 என்ற எண்ணை மாற்றத் தேவையில்லை

17,98,45,67 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 17,98,45,670



(ஆ) 17,98,45,673 -ஐ நூறுகளுக்கு முழுமையாக்க

நூறாவது இடமதிப்பில் உள்ள எண் 6

6 இன் வலதுபக்க எண் $7 > 5$

∴ 6 உடன் 1 ஐக் கூட்ட $6 + 1 = 7$

1798457 இன் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 17,98,45,700



(இ) 17,98,45,673 -ஐ ஆயிரங்களுக்கு முழுமையாக்க

ஆயிரமாவது இடமதிப்பில் உள்ள எண் 5

5 இன் வலதுபக்க எண் $6 > 5$

∴ 5 உடன் 1 ஐக் கூட்ட $5 + 1 = 6$

179846 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 179846000



3. உலகத்தில் மிக உயரமான சிகரமாகிய, நேபாளில் உள்ள எவரெஸ்டின் உயரம் 8848 மீட்டர் ஆகும். இதன் உயரமானது அருகிலுள்ள ஆயிரங்களுக்கு _______________ என முழுமையாக்கலாம்.

தீர்வு : உலகத்தில் மிக உயரமான சிகரமாகிய நேபாளில் உள்ள எவரெஸ்டின் உயரம் 8848 மீட்டர் ஆகும். இதன் உயரமானது அருகில் உள்ள ஆயிரங்களுக்கு **9000** மீட்டர் என முழுமையாக்கலாம்.

சிந்திக்க

(பக்கம் 21)

2,19,440 ஆனது அருகிலுள்ள ஆயிரங்களில் 2,19,000 என முழுமைபடுத்தப்பட்டு உள்ளதா? ஏன்?

தீர்வு : ஆம், நூறின் இட மதிப்பு 4, 5-ஐ விட குறைவாக உள்ளதால் இடது பக்க இலக்கங்களை மாற்றாமல், வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக்க வேண்டும்.

இவற்றை முயல்க

(பக்கம் 22)

(i) 8457 மற்றும் 4573 கூட்டல் மற்றும் வித்தியாசம் ஆகியவற்றின் உத்தேச மதிப்பைக் காண்க.

தீர்வு : 8457 மற்றும் 4573 ஆயிரங்களுக்கு முழுமையாக்க நமக்கு கிடைப்பது :

$8457 \Rightarrow 8000$

$4573 \Rightarrow 5000$

கூட்டல்

$$\begin{array}{r} 8000 \\ (+)\ 5000 \\ \hline 13000 \end{array}$$

வித்தியாசம்

$$\begin{array}{r} 8000 \\ (-)\ 5000 \\ \hline 3000 \end{array}$$

(ii) 39 × 53 இன் உத்தேச மதிப்பைக் காண்க.

தீர்வு : 39 இன் உத்தேச மதிப்பு 40

53 இன் உத்தேச மதிப்பு 50

$\therefore 39 \times 53$ இன் உத்தேச மதிப்பு $40 \times 50 = 2000$

(iii) 6845 ÷ 395 இன் உத்தேச மதிப்பைக் காண்க.

தீர்வு : 6845 இன் உத்தேச மதிப்பு 6800

395 இன் உத்தேச மதிப்பு 400

$\therefore 6800 \div 400 = 17$

ஆகவே 6845 ÷ 395 இன் உத்தேச மதிப்பு 17 ஆகும்.

பயிற்சி 1.4

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) 843 இன் அருகிலுள்ள 100 இன் மதிப்பு ________ **[விடை: 800]**

(ii) 756 இன் அருகிலுள்ள 1000 இன் மதிப்பு ________ **[விடை: 1000]**

(iii) 85654 இன் அருகிலுள்ள 10000 இன் மதிப்பு ________ **[விடை: 90000]**

2. 'சரியா', 'தவறா' எனக் கூறுக:

(i) 8567 ஆனது 8600 என அருகிலுள்ள 10இக்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. **[விடை: தவறு]**

(ii) 139 ஆனது 100 என அருகிலுள்ள 100 இக்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. **[விடை: சரி]**

(iii) 1,70,51,972 ஆனது 1,70,00,000 என அருகிலுள்ள இலட்சத்திற்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. **[விடை: தவறு]**

3. பின்வரும் எண்களைக் கொடுக்கப்பட்ட இட மதிப்பிற்கு முழுமைப்படுத்துக.

(i) 4,065; நூறு **(ii) 44,555; ஆயிரம்**

(iii) 86,943; பத்தாயிரம் **(iv) 50,81,739; இலட்சம்**

(v) 33,75,98,482; பத்துக்கோடி

தீர்வு :

(i) 4,065; நூறு



4065 -ஐ நூறுகளுக்கு முழுமையாக்க வேண்டும்

நூறாவது இடமதிப்பில் உள்ள எண் 0

0 இன் வலதுபக்க எண் 6 > 5

$\therefore$ 0 உடன் 1ஐக் கூட்ட 0 + 1 = 1

41 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக்க நமக்குக் கிடைப்பது 4100

(ii) 44,555; ஆயிரம்



44,555 -ஐ ஆயிரங்களுக்கு முழுமையாக்க வேண்டும்

ஆயிரமாவது இடமதிப்பில் உள்ள எண் 4

4 இன் வலதுபக்க எண் 5 ≥ 5

$\therefore$ 4 உடன் 1ஐக் கூட்ட 4 + 1 = 5

45 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக்க நமக்குக் கிடைப்பது 45000

(iii) 86,943; பத்தாயிரம்



86,943 -ஐ பத்தாயிரங்களுக்கு முழுமைப்படுத்த வேண்டும்

பத்தாயிரம் இடமதிப்பில் உள்ள எண் 8

8 இன் வலதுபக்க எண் 6 > 5

$\therefore$ 8 உடன் 1ஐக் கூட்ட 8 +1 = 9

9 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக்க நமக்குக் கிடைப்பது 90,000

www.surabooks.com

(iv) 50,81,739; இலட்சம்



50,81,739 -ஐ இலட்சங்களுக்கு முழுமைப்படுத்த வேண்டும்

இலட்சம் இடமதிப்பில் உள்ள எண் 0

0 இன் வலதுபக்க எண் 8 > 5

∴ 0 உடன் 1 ஐக் கூட்ட 0 + 1 = 1

51 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக்க நமக்குக் கிடைப்பது 51,00,000

(v) 33,75,98,482; பத்துக்கோடி



33,75,98,482 -ஐ பத்துகோடிகளுக்கு முழுமைப்படுத்த வேண்டும்

பத்துகோடி இடமதிப்பில் உள்ள எண் 3

3 இன் வலதுபக்க எண் 3 < 5 (3 ≯ 5)

∴ 3 என்ற எண்ணை மாற்றத் தேவையில்லை

3 என்ற எண்ணின் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக்க நமக்குக் கிடைப்பது 30,00,00,000

4. 157826 மற்றும் 32469 இன் கூட்டலைப் பத்தாயிரத்திற்கு முழுமையாக்கி உத்தேச மதிப்பு காண்க.

தீர்வு :

உண்மையான மதிப்பு	உத்தேச மதிப்பு (பத்தாயிரத்திற்கு)
157826	1,60,000
32469	30,000
1,90,295	1,90,000

5. ஒவ்வோர் எண்ணையும் அருகிலுள்ள நூறுகளுக்கு முழுமைப்படுத்துக.

(i) 8074 + 4178 **(ii) 1768977 + 130589**

தீர்வு :

(i) 8074 + 4178

8074 - ஐ நூறுகளுக்கு முழுமைப்படுத்தக் கிடைப்பது 8100

4178 - ஐ நுறுகளுக்கு முழுமைப்படுத்தக் கிடைப்பது 4200

கூடுதல் 12300

(ii) 1768977 + 130589

17,68,977 - ஐ நூறுகளுக்கு முழுமைப்படுத்தக் கிடைப்பது 17,69,000

1,30,589 - ஐ நுறுகளுக்கு முழுமைப்படுத்தக் கிடைப்பது 1,30,600

கூடுதல் 18,99,600

6. ஒரு நகரத்தில் 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை 43,43,645 ஆகவும் 2011-ஆம் ஆண்டில் 46,81,087 ஆகவும் இருந்தது. அதிகரித்துள்ள மக்கள் தொகையின் உத்தேச மதிப்பை ஆயிரங்களில் முழுமையாக்குக.

www.surabooks.com

www.surabooks.com

தீர்வு :

	உண்மை மதிப்பு	உத்தேச மதிப்பு (ஆயிரங்களில்)
2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை	46,81,087	46,81,000
2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை	43,43,645	43,44,000
அதிகரித்த மக்கள் தொகை	3,37,442	3,37,000

புறவய வினாக்கள்

7. ஓர் எண்ணை ஆயிரங்களில் முழுமையாக்கினால் கிடைப்பது 11000 எனில் அந்த எண்

(அ) 10345 (ஆ) 10855 (இ) 11799 (ஈ) 10056 **[விடை (ஆ) 10855]**

குறிப்பு:

8 > 5

1 [0] [8] 5 5

↓ ↓ +1 ↓ ↓ ↓

1 1 0 0 0

8. 76812 இன் அருகிலுள்ள நூறுகளின் உத்தேச மதிப்பு

(அ) 77000 (ஆ) 76000 (இ) 76800 (ஈ) 76900 **[விடை (இ) 76800]**

குறிப்பு:

1 < 5

7 6 [8] [1] 2

↓ ↓ ↓ ↓ ↓

7 6 8 0 0

9. 9785764 இன் அருகிலுள்ள இலட்சத்தின் உத்தேச மதிப்பு

(அ) 9800000 (ஆ) 9786000 (இ) 9795600 (ஈ) 9795000

[விடை (அ) 9800000]

குறிப்பு:

8 > 5

9 [7] [8] 5 7 6 4

↓ ↓ +1 ↓ ↓ ↓ ↓ ↓

9 8 0 0 0 0 0

10. 167826 மற்றும் 2765 ஆகியவற்றின் கழித்தலை அருகிலுள்ள ஆயிரங்களுக்கு முழுமையாக்கக் கிடைக்கும் உத்தேச மதிப்பு

(அ) 180000 (ஆ) 165000 (இ) 140000 (ஈ) 155000 **[விடை (ஆ) 165000]**

குறிப்பு:

$$\begin{array}{r} 1{,}68{,}000 \\ 3{,}000 \\ \hline 1{,}65{,}000 \\ \hline \end{array} \; (-)$$

கூடுதல் வினாக்கள்

1. பின்வருவனவற்றை அருகிலுள்ள நூறுகளுக்கு முழுமையாக்குக.

[அ] **439 + 334 + 4317** [ஆ] **1,08,734 − 47,599**

[இ] **8325 − 491** [ஈ] **4,89,348 − 48,365**

தீர்வு : (அ) 439 + 334 + 4317

439 இன் உத்தேச மதிப்பு = 400

334 இன் உத்தேச மதிப்பு = 300

4317 இன் உத்தேச மதிப்பு = 4300

கூடுதல் = 5000

(ஆ) 1,08,734 − 47,599

1,08,734 இன் உத்தேச மதிப்பு = 1,08,700

47,599 இன் உத்தேச மதிப்பு = 47,600

வேறுபாடு = 61,100

(இ) 8325 − 491

8325 இன் உத்தேச மதிப்பு = 8300

491 இன் உத்தேச மதிப்பு = 500

வேறுபாடு = 7,800

(ஈ) 4,89,348 − 48,365

489348 இன் உத்தேச மதிப்பு = 4,89,300

48,365 இன் உத்தேச மதிப்பு = 48,400

வேறுபாடு = 4,40,900

2. பின்வருவனவற்றில் பெருக்கலின் உத்தேச மதிப்பு காண்க.

[அ] **578 × 161** [ஆ] **5281 × 3491**

[இ] **1291 × 592** [ஈ] **9250 × 29**

தீர்வு :(அ) 578 × 161

578 இன் உத்தேச மதிப்பு = 600

161 இன் உத்தேச மதிப்பு = 200

578 × 161 இன் உத்தேச மதிப்பு = 600 × 200

= 1,20,000

(ஆ) 5281 × 3491

5281 இன் உத்தேச மதிப்பு = 5000

3491 இன் உத்தேச மதிப்பு = 3500

5281 × 3491 இன் உத்தேச மதிப்பு = 5000 × 3500

= 1,75,00,000

www.surabooks.com

(இ) 1291 × 592

1291 இன் உத்தேச மதிப்பு	=	1300
592 இன் உத்தேச மதிப்பு	=	600
1291 × 592 இன் உத்தேச மதிப்பு	=	1300 × 600
	=	7,80,000

(ஈ) 9250 × 29

9250 இன் உத்தேச மதிப்பு	=	9000
29 இன் உத்தேச மதிப்பு	=	30
9250 × 29 இன் உத்தேச மதிப்பு	=	9000 × 30
	=	2,70,000

முழு எண்கள் :

- இயல் எண்களை 'N' என்று குறிப்பிடுவோம்.
- முழு எண்களை 'W' என்று குறிப்பிடுவோம்.
- மிகச் சிறிய இயல் எண் 1 ஆகும்.
- மிகச் சிறிய முழு எண் 0 ஆகும்.
- 'W' இல் எண் '1' இக்கு முன்னி '0' உண்டு. ஆனால், '1' இக்கு 'N' இல் முன்னி இல்லை . '0' இக்கு 'W' இல் முன்னி இல்லை .

இவற்றை முயல்க

(பக்கம் 24)

1. 6 + 3 + 8 மற்றும் 3 + 6 + 8 இன் மதிப்பைக் காண்க.

(i) அந்த மதிப்புகள் இரண்டும் சமமா?

(ii) இந்த மூன்று எண்களையும் மாற்றியமைக்க வேறு ஏதேனும் வழி உண்டா?

தீர்வு : $6 + 3 + 8 = 3 + 6 + 8 = 17$

(i) ஆம், $6 + 3 + 8 = 3 + 6 + 8 = 17$, இரு மதிப்புகளும் சமம்

(ii) ஆம். இந்த எண்களை

$3 + 8 + 6 = 8 + 6 + 3 = 8 + 3 + 6 = 6 + 8 + 3$ என மாற்றியமைக்கலாம்.

2. 5 × 2 × 6 மற்றும் 2 × 5 × 6 இன் மதிப்புகளைக் காண்க.

(i) அந்த மதிப்புகள் இரண்டும் சமமா?

(ii) இந்த மூன்று எண்களையும் மாற்றியமைக்க வேறு ஏதேனும் வழி உண்டா?

தீர்வு : $5 \times 2 \times 6 = 2 \times 5 \times 6 = 60$

(i) ஆம், இரு மதிப்புகளும் சமம்

(ii) ஆம். இந்த எண்களை

$2 \times 6 \times 5 = 6 \times 5 \times 2 = 5 \times 6 \times 2 = 6 \times 2 \times 5$ என மாற்றியமைக்கலாம்.

3. 7 − 5 உம் 5 − 7 உம் சமமா? ஏன்?

தீர்வு : $7 - 5 \neq 5 - 7$ (சமமில்லை)

ஏனெனில் கழித்தல் பரிமாற்றும் பண்பை நிறைவு செய்யாது.

www.surabooks.com

4. (15 − 8) − 6 இன் மதிப்பு என்ன? அதன் மதிப்பும் 15 − (8 − 6) இன் மதிப்பும் சமமா? ஏன்?

தீர்வு :

$(15 - 8) - 6 = 7 - 6 = 1$

$15 - (8 - 6) = 15 - 2 = 13$

$\therefore (15 - 8) - 6 \neq 15 - (8 - 6)$

5. 15 ÷ 5 இன் மதிப்பு என்ன? அதுவும் 5 ÷ 15 இன் மதிப்பும் சமமா? ஏன்?

தீர்வு : $15 \div 5 = 3; 5 \div 15 = \frac{1}{3}$

$\therefore 15 \div 5 \neq 5 \div 15$

⇒ முழு எண்களில் வகுத்தல் பரிமாற்றுப் பண்பை நிறைவு செய்யாது.

6. (100 ÷ 10) ÷ 5 இன் மதிப்பு என்ன? 100 ÷ (10 ÷ 5) இன் மதிப்பும் சமமா? ஏன்?

தீர்வு : $(100 \div 10) \div 5 = 10 \div 5 = 2$

$100 \div (10 \div 5) = 100 \div 2 = 50$

$\therefore 100 \div (10 \div 5) \neq (100 \div 10) \div 5 = 50 \neq 2$

⇒ முழு எண்களில் வகுத்தல் சேர்ப்புப் பண்பை நிறைவு செய்யாது.

முழு எண்களின் பண்புகள் :

(i) கூட்டல் மற்றும் பெருக்கலின் பரிமாற்றுப் பண்பு :

- இரண்டு எண்களைக் கூட்டும் போது (அல்லது பெருக்கும் போது) அவ்வெண்களின் வரிசை அவற்றின் கூடுதலைப் (அல்லது பெருக்கலை) பாதிக்காது. இது கூட்டல் (அல்லது பெருக்கல்) இன் பரிமாற்றுப் பண்பு எனப்படும்.
- கழித்தல் மற்றும் வகுத்தலைப் பொருத்து முழு எண்கள் பரிமாற்றுப் பண்பை நிறை செய்யாது.

(ii) கூட்டல் மற்றும் பெருக்கலின் சேர்ப்புப் பண்பு :

- பல எண்களைக் கூட்டும் போது, அவ்வெண்களின் வரிசையைப் பற்றிக் கருத்தில் கொள்ளத் தேவையில்லை . இது கூட்டலின் சேர்ப்புப் பண்பு எனப்படும். இதே போன்று பல எண்களைப் பெருக்கும் போது அவ்வெண்களின் வரிசையைப் பற்றிக் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. இது பெருக்கலின் சேர்ப்புப் பண்பு எனப்படும்.
- இங்கும், முழு எண்களில் கழித்தல் மற்றும் வகுத்தலானது சேர்ப்புப் பண்பை நிறைவு செய்யாது என்பது குறிப்பிடத்தக்கது.

(iii) கூட்டல் மற்றும் கழித்தல் மீதான பெருக்கலின் பங்கீடு :

- ஓர் எண்ணை இரண்டு எண்களின் கூடுதலொடு பெருக்கிக் கிடைக்கும் பெருக்குத் தொகையை, இரண்டு பெருக்குத் தொகைகளின் கூடுதலாகக் குறிப்பிட முடியும். இதே போன்று, ஓர் எண்ணை இரண்டு எண்களுக்கு இடையேயான வித்தியாசத்தை பெருக்கிக் கிடைக்கும் பெருக்குத் தொகையை இரண்டு பெருக்குத் தொகையின் வித்தியாசமாக குறிப்பிட முடியும். இது கூட்டல் மற்றும் கழித்தல் மீதான பெருக்கலின் பங்கீட்டு பண்பு எனப்படும்.
- மேலும், முழு எண்களில் பெருக்கலின் மீதான கூட்டல் பங்கீட்டு பண்பை நிறைவு செய்யாது.

(iv) கூட்டல் மற்றும் பெருக்கல் சமனி :

- எந்த ஓர் எண்ணுடனும் பூச்சியத்தைக் கூட்டும் போது நமக்கு அதே எண் கிடைக்கும். அதே போன்று எந்த ஓர் எண்ணையும் 1 ஆல் பெருக்கும் போது நமக்கு அதே எண் கிடைக்கும். ஆகவே , '0' கூட்டல் சமனி எனவும் '1' பெருக்கல் சமனி எனவும் அழைக்கப்படும்.

இறுதியாகச் சில முக்கிய எளிய கூற்றுகளை நோக்குவோம்

- இரண்டு இயல் எண்களைக் கூட்டும் போது நமக்கு ஓர் இயல் எண் கிடைக்கும். அதே போன்று, இரண்டு இயல் எண்களைப் பெருக்கும் போதும் இயல் எண் கிடைக்கும்.
- இரண்டு முழு எண்களைக் கூட்டும் போது நமக்கு ஒரு முழு எண் கிடைக்கும். அதே போன்று, இரண்டு முழு எண்களைப் பெருக்கும் போதும் முழு எண் கிடைக்கும்.
- ஒரு முழு எண்ணோடு ஓர் இயல் எண்ணைக் கூட்டும் போது நமக்கு ஓர் இயல் எண் கிடைக்கும். ஓர் இயல் எண்ணை ஒரு முழு எண்ணோடு பெருக்கும் போது நமக்கு ஒரு முழு எண் கிடைக்கும்.

www.surabooks.com

www.surabooks.com

இவற்றை முயல்க

(பக்கம் 25)

1. குறைந்தது மூன்று சோடி எண்களைப் பயன்படுத்தி, முழு எண்களின் கழித்தலானது பரிமாற்றுப் பண்பை நிறைவு செய்யாது என்பதனைச் சரிபார்க்க.

தீர்வு : (அ) 7 மற்றும் 20 $20-7 \neq 7-20$

(ஆ) 300 மற்றும் 100 $300-100 \neq 100-300$

(இ) 60 மற்றும் 5 $60-5 \neq 5-60$

∴ இவை முழுக்களின் கழித்தலானது பரிமாற்றுப் பண்பை நிறைவு செய்யாது என அறியலாம்.

2. $10 \div 5$ உம் $5 \div 10$ உம் ஒன்றா? மேலும் இரண்டு எண்சோடிகளை எடுத்துக் கொண்டு இச்செயல்பாட்டினை மெய்ப்பிக்கவும்.

தீர்வு : $10 \div 5 \neq 5 \div 10$. மேலும் எடுத்துக்காட்டுகள் (அ) $20 \div 10 \neq 10 \div 20$ (ஆ) $100 \div 50 \neq 50 \div 100$

இவற்றை முயல்க

(பக்கம் 26)

பின்வரும் அட்டவணையை நிறைவு செய்க.

(i)

9	+	0	=	9
7	+	0	=	7
0	+	17	=	17
0	+	37	=	37
0	+	ஏதேனும் ஒரு எண்	=	அதே எண்

(ii)

11	×	1	=	11
1	×	55	=	55
1	×	12	=	12
1	×	100	=	100
1	×	ஏதேனும் ஒரு எண்	=	அதே எண்

இவற்றை முயல்க

(பக்கம் 27)

அட்டவணையை நிறைவு செய்க.

6	+	8	=	14, ஓர் இயல் எண்
4	+	5	=	9, ஓர் இயல் எண்
4	×	5	=	20, ஓர் இயல் எண்
6	×	8	=	48, ஓர் இயல் எண்
100	+	**10**	=	**110, ஓர் இயல் எண்**
20	+	**30**	=	**50, ஓர் இயல் எண்**
20	×	**30**	=	**600, ஓர் இயல் எண்**
100	×	**10**	=	**1000, ஓர் இயல் எண்**
6	+	8	=	14, ஓர் முழு எண்
4	+	5	=	9, ஓர் முழு எண்
15	×	0	=	0, ஓர் முழு எண்
11	×	2	=	22, ஓர் முழு எண்
100	+	**10**	=	**110, ஓர் முழு எண்**
20	+	**30**	=	**50, ஓர் முழு எண்**
75	×	**0**	=	**0, ஓர் முழு எண்**
80	×	**1**	=	**80, ஓர் முழு எண்**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

பயிற்சி 1.5

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) மிகச் சிறிய இயல் எண்ணிற்கும் மிகச் சிறிய முழு எண்ணிற்கும் இடையே உள்ள வித்தியாசம்_____ **[விடை: 1]**

குறிப்பு: மிகச் சிறிய இயல் எண் = 1. மிகச் சிறிய முழு எண் = 0.

(ii) 17 × ______ = 34 × 17 **[விடை: 34]**

(iii) ஓர் எண்ணுடன் ________ ஐக் கூட்டும்போது, அந்த எண் மாறாமல் இருக்கும் **[விடை: 0]**

குறிப்பு: கூட்டல் சமனி பூச்சியம் ஆகும்.

(iv) _________ ஆல் வகுப்பது என்பது வரையறுக்கப்படவில்லை **[விடை: 0]**

(v) ஓர் எண்ணை _______ ஆல் பெருக்கும்போது அந்த எண் மாறாமல் இருக்கும் **[விடை: 1]**

குறிப்பு: பெருக்கல் சமனி 1 ஆகும்.

2. சரியா? தவறா? எனக் கூறுக.

(i) முழு எண்களின் பெருக்கல் சமனி பூச்சியம் ஆகும். **[தவறு]**

(ii) இரு முழு எண்களின் கூடுதல் அதன் பெருக்குத் தொகையை விடக் குறைவானதாக இருக்கும். **[தவறு]**

(iii) முழு எண்களில் கூட்டல் மற்றும் பெருக்கல் ஆகியவை சேர்ப்புப் பண்புடையவை. **[சரி]**

(iv) முழு எண்களில் கூட்டல் மற்றும் பெருக்கல் ஆகியவை பரிமாற்றுப் பண்புடையவை. **[சரி]**

(v) முழு எண்களில் கூட்டலின் மீதான பெருக்கல் பங்கீட்டுப் பண்புடையது. **[சரி]**

3. கீழ்க்காணும் வினாக்களில் பெறும் பண்பு யாது?

(i) **75 + 34 = 34 + 75** = கூட்டலின் பரிமாற்றுப் பண்பு

(ii) **(12 × 4) × 8 = 12 × (4 × 8)** = பெருக்கலின் சேர்ப்புப் பண்பு

(iii) **50 + 0 = 50** = ‘0’ கூட்டல் சமனி

(iv) **50 × 1 = 50** = ‘1’ பெருக்கல் சமனி

(v) **50 × 42 = 50 × 40 + 50 × 2** = கூட்டல் மீதான பெருக்கலின் பங்கீடு

4. முழு எண்களின் பண்புகளைப் பயன்படுத்திச் சுருக்குக.

(i) **50 × 102** **(ii)** **500 × 689 − 500 × 89**

(iii) **4 × 132 × 25** **(iv)** **196 + 34 + 104**

தீர்வு :

(i) **50 × 102**

கூட்டல் மீதான பெருக்கலின் பங்கீட்டு விதிப்படி

$50 \times 102 = 50 \times (100 + 2)$

$50 \times 102 = 50 \times 100 + 50 \times 2 = 5000 + 100 = 5100$

$50 \times 102 = 5100$

(ii) **500 × 689 − 500 × 89**

கழித்தல் மீதான பெருக்கலின் பங்கீட்டு விதிப்படி

$500 \times 689 - 500 \times 89 = 500 \times (689 - 89)$

$= 500 \times 600$

$= 300000$

$500 \times 689 - 500 \times 89 = 3,00,000$

www.surabooks.com

(iii) **4 × 132 × 25**

பெருக்கலின் பரிமாற்றுப் பண்பை பயன்படுத்த

$\therefore \quad 4 \times 132 \times 25 = 4 \times 25 \times 132$

$= 100 \times 132$

$= 13200$

$4 \times 132 \times 25 = 13200$

(iv) **196 + 34 + 104**

196 + 34 + 104 =196 + 104 + 34 [கூட்டல் பரிமாற்று பண்பை பயன்படுத்த]

$= 300 + 34$

$= 334$

$196 + 34 + 104 = 334$

புறவய வினாக்கள்

5. **(53 + 49) × 0 என்பது**

(அ) 102 (ஆ) 0 (இ) 1 (ஈ) 53 + 49 × 0 **[விடை (ஆ) 0]**

குறிப்பு: 53 × 0 + 49 × 0 = 0 + 0 = 0

6. $\frac{59}{1}$ **என்பது**

(அ) 1 (ஆ) 0 (இ) $\frac{1}{59}$ (ஈ) 59 **[விடை (ஈ) 59]**

குறிப்பு: $\frac{59}{1} = 59$

7. **ஒரு பூச்சியமற்ற முழு எண் மற்றும் அதனுடைய தொடரியின் பெருக்குத்தொகை எப்போதும்**

(அ) ஓர் இரட்டை எண் (ஆ) ஓர் ஒற்றை எண்

(இ) பூச்சியம் (ஈ) இவற்றுள் ஏதுமில்லை

குறிப்பு: ஓர் முழு எண் (பூச்சியமற்ற) × அதனின் தொடர் எண் = ஓர் இரட்டை எண்

எ.கா. 1 × 2 = 2 **[விடை (அ) ஓர் இரட்டை எண்]**

8. **முன்னி இல்லாத ஒரு முழு எண்**

(அ) 10 (ஆ) 0 (இ) 1 (ஈ) இவற்றுள் ஏதுமில்லை

[விடை (ஆ) 0]

9. **பின்வரும் கோவைகளில் எது பூச்சியமல்ல?**

(அ) 2 × 0 (ஆ) 0 + 0 (இ) 2 + 0 (ஈ) 0 – 0 **[விடை (இ) 2 + 0]**

குறிப்பு: பூச்சியத்தால் வகுத்தல் வரையறுக்கப்படவில்லை.

10. **பின்வருவனற்றுள் எது உண்மை அல்ல?**

(அ) (4237 + 5498) + 3439 = 4237 + (5498 + 3439)

(ஆ) (4237 × 5498) × 3439 = 4237 × (5498 × 3439)

(இ) 4237 + 5498 × 3439 = (4237 + 5498) × 3439

(ஈ) 4237 × (5498 + 3439) = (4237 × 5498) + (4237 × 3439)

[விடை (இ) 4237 + 5498 × 3439 = (4237 + 5498) × 3439]

குறிப்பு: கூட்டல் மீதான பெருக்கலின் பங்கீட்டுப் பண்பு தவறாக உள்ளது.

கூடுதல் வினாக்கள்

1. எல்லா முழு எண்களும் இயல் எண்களா? உனது விடையை சரியெனக் காட்டு.

தீர்வு : இல்லை. எல்லா முழு எண்களும் இயல் எண்கள் அல்ல. ஏனெனில் '0' என்ற முழு எண் ஓர் இயல் எண் அல்ல. எனவே பூச்சியம் தவிர்த்து மீதமுள்ள அனைத்து முழு எண்களும் இயல் எண்களாகும்.

2. சேர்ப்புப் பண்பை பயன்படுத்திக் கூட்டுக. 847 + 306 + 453

தீர்வு : $847+306+453=(847+453)+306$

$=1300+306$

$=1606$

$847+306+453=1606$

3. (1063 × 127) – (1063 × 27) இன் மதிப்பு காண்க.

தீர்வு : $(1063 \times 127) - (1063 \times 27) = 1063 \times (127 - 27)$ (பொதுவான 1063 ஐ வெளியே எடுக்க)

$=1063\times100$

$=1,06,300$

$(1063\times127)-(1063\times27)=1,06,300$

4. சரியான பண்புகளை பயன்படுத்தி பெருக்கல்பலன் காண்க.

(அ) 738 × 103 **(ஆ) 1005 × 168**

தீர்வு : (அ) 738 × 103

$738 \times 103 = 738 \times (100 + 3)$

$= 738 \times 100 + 738\times3$ (கூட்டல் மீதான பெருக்கலின் பங்கீட்டுப் பண்பு)

$= 73800 + 2214 = 76,014$

(ஆ) 1005 × 168

$1005 \times 168 = 168 \times 1005$ (பெருக்கலின் பரிமாற்றுப் பண்பு)

$= 168 \times (1000 + 5)$

$= 168 \times 1000 + 168 \times 5$(கூட்டல்மீதானபெருக்கலின்பங்கீட்டுப்பண்புப்படி)

$= 168000 + 840$

$= 1,68,840$

பயிற்சி 1.6

பல்வகைத் திறனறிப் பயிற்சிக் கணக்குகள்

1. என்னுடைய பூட்டப்பட்ட பெட்டியைத் திறக்கப் பயன்படும் கடவுச் சொல்லானது மிகப்பெரிய 5 இலக்க ஒற்றை எண் ஆகும். இது 7, 5, 4, 3 மற்றும் 8 ஆகிய இலக்கங்களைக் கொண்டது எனில் அக்கடவுச் சொல்லைக் கண்டறிக.

தீர்வு : கடவுச்சொல் 7, 5, 4, 3 மற்றும் 8 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மிகப்பெரிய 5 இலக்க ஒற்றை எண் ஆகும்.

∴ இறங்கு வரிசையில் இலக்கங்களை எழுத 87543. தேவையான கடவுச்சொல் 87543

2. 2001-இல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நான்கு மாநிலங்களின் மக்கள் தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மக்கள் தொகையின்படி அம்மாநிலங்களை ஏறு மற்றும் இறங்கு வரிசையில் வரிசைப்படுத்துக.

மாநிலம்	மக்கள்தொகை
தமிழ்நாடு	72147030
இராஜஸ்தான்	68548437
மத்தியபிரதேசம்	72626809
மேற்குவங்காளம்	91276115

தீர்வு : கொடுக்கப்பட்ட எல்லா எண்களும் எட்டு இலக்கங்களைக் கொண்டுள்ளன.

∴ இடதுபக்க இலக்கத்தில் அதிக மதிப்புடைய எண்களை பெரிய எண்ணாகும்.

∴ மிகப்பெரிய எண் 91276115

மிகச்சிறிய எண் 68548437

72147030 மற்றும் 72626809 ஐ ஒப்பிட

கோடி	பத்து இலட்சம்	இலட்சம்	பத்தாயிரம்	ஆயிரம்	நூறு	பத்து	ஒன்று
7	2	1	4	7	0	3	0
7	2	6	2	6	8	0	9

$7 = 7 ; 2 = 2 ; 1 < 6$

∴ $72147030 < 72626809$

∴ ஏறுவரிசை $68548437 < 72147030 < 72626809 < 91276115$

இறங்குவரிசை $91276115 > 72626809 > 72147030 > 68548437$

∴ மக்கள் தொகையின் படி மாநிலங்களின் ஏறுவரிசை :

இராஜஸ்தான் < தமிழ்நாடு < மத்தியபிரதேசம் < மேற்குவங்காளம்

இறங்குவரிசை : மேற்குவங்காளம் > மத்திய பிரதேசம் > தமிழ்நாடு > இராஜஸ்தான்.

3. பின்வரும் அட்டவணையை உற்று நோக்கி, கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஆண்டு	புலிகளின் எண்ணிக்கை
1990	3500
2008	1400
2011	1706
2014	2226

(i) **2011-இல் இருந்த புலிகள் எத்தனை?**

(ii) **1990ஐ விட 2008-இல் எத்தனை புலிகள் குறைந்துள்ளன?**

(iii) **2011 மற்றும் 2014-இக்கும் இடையே உள்ள புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா?**

தீர்வு : (i) 2011-இல் இருந்த புலிகள் = 1,706

(ii) 1990-ஐ விட 2008 இல் இருந்த புலிகள் = 3500 – 1400

குறைந்துள்ள புலிகள் = 2100

ஆகவே 2100 புலிகள் குறைந்துள்ளன.

(iii)

		1 12
2014-இல் இருந்த புலிகள்	=	~~2~~ ~~2~~ 26 (–)
2011-இல் இருந்த புலிகள்	=	1706
		520

2011ஐ விட 2014 இல் 520 புலிகள் அதிகரித்துள்ளன.

4. முல்லைக்கொடி, ஒவ்வொரு பையிலும் 9 ஆப்பிள்கள் கொண்ட 25 பைகள் வைத்திருந்தாள். அவளுடைய 6 நண்பர்களுக்கு அவற்றைச் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தாள் எனில், ஒவ்வொரு நண்பரும் எத்தனை ஆப்பிள்களைப் பெற்றிருப்பர். ஆப்பிள்கள் மீதமிருக்க வாய்ப்புண்டா? உண்டெனில் எத்தனை?

தீர்வு : ஒரு பையிலிருந்த ஆப்பிள்களின் எண்ணிக்கை = 9

∴ 25 பைகளிலிருந்த ஆப்பிள்களின் எண்ணிக்கை = $9 \times 25 = 225$

நண்பர்களின் எண்ணிக்கை = 6

∴ ஒரு நண்பர் பெறும் ஆப்பிள்களின் எண்ணிக்கை = $225 \div 6 = 37$

(i) ஒவ்வொரு நண்பரும் பெறும் ஆப்பிள்களின் எண்ணிக்கை = 37

(ii) ஆம், ஆப்பிள்கள் மீதமிருக்க வாய்ப்புண்டு

(iii) 3 ஆப்பிள்கள் மீதமிருக்கும். [$\because 37 \times 6 = 222;\ 225 - 222 = 3$]

5. ஒரு கோழிப்பண்ணையிலிருந்து 15472 முட்டைகளை, ஓர் அடுக்கு அட்டையில் 30 முட்டைகள் வீதம் அடுக்கினால், மொத்தம் எத்தனை அடுக்கு அட்டைகள் தேவைப்படும்?

தீர்வு : மொத்த முட்டைகளின் எண்ணிக்கை = 15472

ஓர் அடுக்கு அட்டையில் உள்ள முட்டைகள் = 30

∴ தேவைப்படும் அட்டைகள் = $15472 \div 30$

= 516

[$\because 515 + 1 = 516$, மீதமுள்ள 22 முட்டைகளுக்கு தேவைப்படும் அடுக்கு அட்டைகள்]

```
     515
30)15472
   150
   ----
     47
     30
   ----
    172
    150
   ----
     22
```

மேற்சிந்தனைக் கணக்குகள்

6. அட்டவணையைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

விண்மீன் பெயர்	விட்டம் (மைல்களில்)
சூரியன்	864730
சிரியஸ்	1556500
அகத்தியம்	25941900
ஆல்∴பா சென்டாரி	1037700
சுவாதி விண்மீன்	19888800
வேகா	2594200

(i) **அகத்தியம் விண்மீன் விட்டத்தை இந்திய மற்றும் பன்னாட்டு முறையில் எழுதுக.**

(ii) **சிரியஸ் விண்மீன் விட்டத்தில் உள்ள 5-இன் மதிப்புகளின் கூடுதலை இந்திய முறையில் எழுதுக.**

(iii) **எண்ணூற்று அறுபத்து நான்கு மில்லியன் எழுநூற்று முப்பது என்பதை இந்திய முறையில் எழுதுக.**

(iv) **சுவாதி விண்மீன் விட்டத்தை பன்னாட்டு முறையில் எழுதுக.**

(v) **அகத்தியம் மற்றும் சுவாதி விண்மீன்களின் விட்டங்களின் வேறுபாட்டை இந்திய மற்றும் பன்னாட்டு முறையில் எழுதுக.**

தீர்வு : (i) அகத்தியம் விண்மீன் விட்டம் 25941900 மைல்கள்

இந்திய முறை:

கோடி	பத்து இலட்சம்	இலட்சம்	பத்தாயிரம்	ஆயிரம்	நூறு	பத்து	ஒன்று
2	5	9	4	1	9	0	0

2,59,41,900 - இரண்டு கோடியே ஐம்பத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்து ஒன்றாயிரத்து தொள்ளாயிரம்.

பன்னாட்டு முறை :

பத்து மில்லியன்	மில்லியன்	நூறாயிரம்	பத்தாயிரம்	ஆயிரம்	நூறு	பத்து	ஒன்று
2	5	9	4	1	9	0	0

25,941,900 - இருபத்து ஐந்து மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பத்து ஒன்றாயிரத்து தொள்ளாயிரம்.

www.surabooks.com

www.surabooks.com

(ii) சிரியஸ் விண்மீனின் விட்டம் 1556500

5 -ன் இடமதிப்புகளின் கூடுதல் = 5,00,000 + 50,000 + 500 = 5,50,500

(iii) பன்னாட்டு முறை :

பன்னாட்டு முறை	நூறு மில்லியன்	பத்து மில்லியன்	மில்லியன்	நூறாயிரம்	பத்தாயிரம்	ஆயிரம்	நூறு	பத்து	ஒன்று
கொடுக்கப்பட்ட எண்	8	6	4	0	0	0	7	3	0
இந்திய முறை	பத்து கோடி	கோடி	பத்து இலட்சம்	இலட்சம்	பத்து ஆயிரம்	ஆயிரம்	நூறு	பத்து	ஒன்று

எண்பத்து ஆறு கோடியே நாற்பது இலட்சத்து எழுநூற்று முப்பது.

(iv) சுவாதி விண்மீனின் விட்டம் 19,888,800 மைல்கள்

பத்தொன்பது மில்லியன் எண்ணூற்று எண்பத்து எட்டு ஆயிரத்து எண்ணூறு.

(v) அகத்தியம் விண்மீனின் விட்டம் = 25941900 மைல்கள்

சுவாதி விண்மீனின் விட்டம் = 19888800 மைல்கள்

வேறுபாடு = 6053100 மைல்கள்

இந்திய முறை: 60,53,100 - அறுபது இலட்சத்து ஐம்பத்து மூன்று ஆயிரத்து நூறு.

பன்னாட்டு முறை : 6,053,100 - ஆறு மில்லியன் ஐம்பத்து மூன்று ஆயிரத்து நூறு.

7. அன்பு, அறிவுச்செல்வியிடம் ஓர் ஐந்து இலக்க ஒற்றைப்படை எண்ணை நினைவில் கொள்ளுமாறுக் கூறினான். மேலும் பின்வரும் குறிப்புகளைக் கூறுகிறான்.

- 1000 ஆவது இடமதிப்பில் உள்ள இலக்கம் 5 ஐ விடக் குறைவு.
- 100 ஆவது இடமதிப்பில் உள்ள இலக்கம் 6 ஐ விடக் குறைவு.
- 10 ஆவது இடமதிப்பில் உள்ள இலக்கம் 8

அறிவுச்செல்வி கூறிய விடை என்னவாக இருக்கும்? அவள் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளைக் கூறுவாளா?

தீர்வு :

பத்து ஆயிரம்	ஆயிரம்	நூறு	பத்து	ஒன்று
4	3	5	8	1
3	1	4	8	3
2	2	3	8	5
1	3	2	8	7
5	4	1	8	9

4 3 5 8 1 என்பது ஒரு விடை. மேலும் பல விடைகளைக் கூற முடியும்.

8. ஓர் அரங்கில் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற உள்ளது. மொத்தமுள்ள 7689 நாற்காலிகளை வரிசைக்கு 90 நாற்காலிகள் வீதம் போடப்படுகிறது எனில்,

(i) எத்தனை வரிசைகளில் இருக்கும்? (ii) எத்தனை நாற்காலிகள் மீதம் இருக்கும்?

தீர்வு : (i) மொத்த நாற்காலிகள் = 7689

ஒரு வரிசையில் உள்ள நாற்காலிகள் = 90

∴ மொத்தமுள்ள வரிசைகள் = 7689 ÷ 90 = 85

∴ 85 வரிசைகளில் நாற்காலிகளை போடலாம்.

(ii) 39 நாற்காலிகள் மீதம் இருக்கும்.

```
      85
90 | 7689
     720
     ----
      489
      450
     ----
       39
```

9. ஏழு இலக்க எண் 29,75,842-ஐ இலட்சம் மற்றும் பத்து இலட்சத்திற்கு முழுமையாக்குக. அம்மதிப்புகள் சமமாக இருக்குமா?

தீர்வு : (i) 29,75,842 -ஐ இலட்சங்களுக்கு முழுமையாக்க வேண்டும்

இலட்சமாவது இடமதிப்பில் உள்ள எண் 9

9-ன் வலது பக்கத்தில் உள்ள எண் 7 > 5

∴ 9- உடன் 1 ஐக் கூட்ட 9 + 1 = 10

www.surabooks.com

∴ 29 என்பது 30 ஆகிறது.

30-இன் வலதுபக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது

இலட்சத்துக்கு முழுமையாக 30,00,000

(ii) 29,75,842 -ஐ பத்து இலட்சங்களுக்கு முழுமையாக்க வேண்டும்

பத்து இலட்சமாவது இடத்தில் உள்ள எண் 2

2 -இன் வலது பக்க எண் $9 > 5$

∴ 2 -உடன் 1 -ஐக் கூட்ட $2 + 1 = 3$

3-இன் வலது பக்க இலக்கங்களை பூச்சியமாக மாற்ற நமக்குக் கிடைப்பது 30,00,000

இரு மதிப்புகளும் சமமாக உள்ளன.

10. செய்தித்தாள் மற்றும் இதழ்களிலிருந்து 5 அல்லது 6 அல்லது 7 இலக்க எண்களைக் கண்டுபிடித்துப் பத்தாயிரத்துக்கு முழுமையாக்குக.

தீர்வு : (i) இந்த ஆண்டு 30,000 மாணவர்கள் பொதுத் தேர்வு எழுத உள்ளனர்.

(ii) தோராயமாக 2,10,000 அளவுக்கு விவசாயக் கடன் தள்ளுபடி அளிக்கப்பட்டது.

(iii) 46,00,000 மாணவர்களுக்கு இவ்வாண்டு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

☆☆☆

www.surabooks.com